## தமிழ்நாட்டின் உரிமைகள் — நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தை நாள்தோறும் அதிரவைக்கும் கழக எம்.பி.க்கள்!



### பழங்குடியினர் மற்றும் பாரம்பரிய வனவாசிகளுக்கான

# வன உரிமை சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா?

## நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி!



புதுடெல்லி, மார்ச் 22 - பழங்குடியினர் மற்றும் பாரம்பரிய வனவாசிகளுக்கான வன உரிமை முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்து திமுக துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, ராகுல் காந்தி:, ராஜா ராம் சிங் ஆகியோர் எழுத்துபூர்வமான கேள்விகளைக் கேட்டிருந்தனர்.

“பழங்குடியினர் மற்றும் பிற பாரம்பரிய வனவாசிகளுக்கு வன உரிமை வழங்குவதில், வன உரிமைச் சட்டம் 2006 செயல்படுத்தப் படும் நிலை குறித்து அரசாங்கம் அறிந்திருக்கிறதா? அதன் விவரங்கள், மாநில, யூனியன் பிரதேச வாரியாக என்ன?

வன உரிமைகள் சட்டம், 2006 செயல்படுத்தப்பட்டதிலிருந்து, பழங்குடியின மக்களுக்கும் பிற பாரம்பரிய வனவாசிகள் (ஓடிஎஃப்டி)க்கும் வழங்கப்பட்ட தனிநபர் வன உரிமை கள் (ஐஎஃப்ஆர்) மற்றும் சமூக வன (சிஎஃப்ஆர்) உரிமைகளின் எண்ணிக்கை மாநில/யூனியன் பிரதேச வாரியாக எவ்வளவு?

**பயனாளிகளுக்கு உரிமைகள் மறுப்பு!**

பல மாநிலங்களில் பல தகுதியுள்ள பயனாளிகளுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன என்பதையும் அரசாங்கம் அறிந்திருக்கிறதா? அப்படியானால், அத்தகைய பயனாளிகள் தங்கள் உரிமைகளைப் பெறு வதற்கான தீர்வு வழிமுறைகள் என்ன?

தாக்கல் செய்யப்பட்டு நிராகரிக்கப்பட்ட கோரிக்கைகளின் விவரங்கள், மறு ஆய்வுக்காக அனுப்பப்பட்ட கோரிக்கைகளின் விவரங்கள் என்ன?

வன உரிமைகள் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தால் பெறப்பட்ட தனிநபர் மற்றும் கூட்டு விண்ணப்ப ங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் நிராகரிக்கப் பட்ட மற்றும் நிலுவையில் உள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை மாநில வாரியாக என்ன?

சட்டவிரோதம் என்ற பெயரில் பழங்குடியினர் மற்றும் பிற பாரம்பரிய வனவாசிகளை வெளியேற்றும் வன மற்றும் பிற துறை அதிகாரிகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

வன உரிமைகள் சட்டத்தின் கீழ் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டதால் பழங்குடியினர் மற்றும் பிற வனவாசிகள் வெளியேற்றப்பட்டுள்ளார்களா? அப்படியானால், 2019 முதல் வெளியேற்றப்பட்டவர்களின் விவரங்கள் என்ன?” ஆகிய கேள்விகளைக் கேட்டிருந்தனர்.

**இணை அமைச்சர் பதில்!**

இந்தக் கேள்விகளுக்கு ஒன்றிய பழங்குடி விவகாரங்கள் துறை இணையமைச்சர் துர்கா தாஸ் உய்கி அளித்த பதிலில்,

“பழங்குடியினர் மற்றும் பிற பாரம்பரிய வனவாசிகள் (வன உரிமைகளை அங்கீகரித்தல்) சட்டம், 2006 மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளை பெரும்பாலும் செயல்படுத்துவதற்கு மாநில அரசுகளே பொறுப்பாகும்.

அதே நேரத்தில் பழங்குடியினர் விவகார அமைச்சகம் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களிடமிருந்து மாதாந்திர முன்னேற்ற அறிக்கையைப் பெறுகிறது.

20 மாநிலங்கள் மற்றும் 1 யூனியன் பிரதேசத்தில் வன உரிமைச் சட்டம் செயல்படுத்தப்படுகிறது. உரிமை கோரல் செயல்முறைக்கான நிறுவன கட்டமைப்பை இந்தச் சட்டம் வழங்குகிறது,

உரிமை கோரல்கள் முதலில் பெறப்பட்டு, கிராம சபையால் மதிப்பாய்வு செய்யப்பட்டு பின்னர் துணைபிரிவு நிலைக் குழுவிற்கு அனுப்பப்படும். பின்னர், மாவட்ட அளவிலான குழு கோரிக்கைகளை முடிவு செய்கிறது. இந்தக் குழுக்கள் மாநில அரசுகள், யூனியன் பிரதேச நிர்வாக ங்களால் அமைக்கப்படுகின்றன.

மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் தெரிவித்தபடி, ஒட்டுமொத்தமாக பிப்ரவரி 28, 2025 வரை, 23 லட்சத்து 85 ஆயிரத்து 334 தனிநபர் மற்றும் 1 லட்சத்து 18 ஆயிரத்து 119 சமூக உரிமைகள் என மொத்தம் 25 லட்சத்து 3 ஆயிரத்து 453 உரிமைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இதேபோல், கிராம சபையளவில் தாக்கல் செய்யப் பட்ட 48,99,903 தனிநபர் உரிமை கோரல்களில் மொத்தம் 18,03,183 உரிமை கோரல்கள் நிராகரிக்கப் பட்டுள்ளன.

குறிப்பாக தமிழ்நாட்டில் 33 ஆயிரத்து 119 தனி நபர் உரிமை கோரல்களும், 1,548 சமூக உரிமை கோரல்களும் பெறப்பட்டன. அவற்றில் 15 ஆயிரத்து 442 தனிப்பட்ட உரிமைகளும், 1066 சமூக உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன 12 ஆயிரத்து 711 கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. 5 ஆயிரத்து 448 உரிமை கோரல் விண்ணப்பங்கள் நிலுவையில் இருக்கின்றன.

பழங்குடி சமூகம் மற்றும் பிற பாரம்பரிய வனவாசிகள் (OTFDகள்) என வழங்கப்பட்ட உரிமைகளின் பிரிக்கப்பட்ட விவரங்கள் பராமரிக்கப்படுவதில்லை. இந்த நடவடிக்கைகளை செயல்படுத்துதல் மாநில அரசுகளின் பொறுப்பு என்பதால் ஒன்றிய அரசினால் பராமரிக்கப்படுவதில்லை.

FRAவின் கீழ் பட்டாக்கள்/உரிமைகள் வழங்குவதற்காக பெறப்பட்ட உரிமை கோரல்கள், வழங்கப்பட்ட உரிமைகள், நிராகரிக்க ப்பட்ட உரிமை கோரல்கள் பற்றிய விவரங்கள் அமைச்சகத்தின் வலை த்தளத்தில் FRA MPR https://tribal.nic.in/FRA.aspx இல் கிடைக்கிறது.

வனத்தில் இருந்து வெளியேற்றப்படுவதற்கு எதிரான பாதுகாப்பு மற்றும் பாதிக்கப்பட்டவர் SDLC மற்றும் DLC (பிரிவு 6(2) மற்றும் 6(4)) க்கு மனு அளிப்பதற்கான வழிவகைகளையும வனச் சட்டம் வழங்குகிறது. மேலும், மாநில தலைமைச் செயலாளரின் தலைமையிலான கண்காணிப்பு குழு, அங்கீகாரம், சரிபார்ப்பு மற்றும் வன உரிமைகளை வழங்குதல், கள அளவிலான பிரச்சினை களை பரிசீலித்தல் மற்றும் நிவர்த்தி செய்தல் ஆகிய பணிகளுக்காக குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட வேண்டும்.

FRAவில் உள்ள விதி களுக்குக் கட்டுப்படவும், அனைத்து தகுதியுள்ள உரிமை கோருபவர்களுக்கும் அவர்களுக்கு உரிய உரிமைகள் வழங்கப்படுவதை உறுதி செய்யவும் பழங்குடியினர் நல அமைச்சகம் அனைத்து மாநில அரசுகளையும் வலியுறுத்தி வருகிறது.

விரிவான செயல்படுத்தலுக்காக, FRA இன் கீழ் பரிசீலிக்கப்படக்கூடிய சாத்தியமான வனப்பகுதிகளை வரைபடமாக்குவதற்கும், அனைத்து பங்குதாரர்களின் திறன் மேம்பாட்டை மேற்கொள்வதற்கும் FRA அட்லஸைத் தயாரிக்கவும் அமைச்சகம் மாநிலங்களை வலியுறுத்துகிறது. இந்த விஷயத்தில் மாநில அரசுகளுடன் வழக்கமான கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

FRA மீறல் தொடர்பாக ஒன்றிய அமைச்சகத்தால் பெறப்பட்ட குறைகள், மனுக்கள் சம்பந்தப்பட்ட மாநிலங்கள்யூனியன் பிரதேசங்களுக்கு அனுப்பப்படுகின்றன, இதனால் சட்டப்பூர்வமான உரிமை கோருபவர்களின் வன உரிமைகள் மறுக்கப்படுவதில்லை என்பதை உறுதிசெய்ய முழுமையாக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

கள அளவிலான ஒருங்கிணைப்பு சிக்கல்களைத் தீர்க்க, ஒன்றிய பழங்குடியினர் விவகார அமைச்சகமும் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகமும் அனைத்து மாநிலங்களின் தலைமைச் செயலாளர்களுக்கும் கூட்டு ஆலோசனைகளை வழங்கியுள்ளன.

கடந்த 2019 ஆம் ஆண்டில் இருந்து வனத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட பழங்குடியினர் மற்றும் பிற பாரம்பரிய வனவாசிகள் பற்றிய விவரங்கள் பராமரிக்கப்படவில்லை. இருப்பினும், வெளியேற்றம் தொடர்பான வழக்கு (WP 109/2008) தற்போது உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது” என்று ஒன்றிய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

---

### சென்னை - திருச்சி, பெங்களூர், கொல்கத்தா நெடுஞ்சாலைகள்

# 10வழிச் சாலைகளாக மேம்படுத்தப்படுமா?

## மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு வினா!



புதுடெல்லி, மார்ச்.22- நாளுக்குநாள் பல்கிப் பெருகி வரும் வாகனப் போக்குவரத்தை கணக்கில் கொண்டு சென்னை திருச்சி, சென்னை பெங்களூரு, சென்னைதிருப்பதி மற்றும் சென்னை கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலைகள் 60 கிலோமீட்டர் தொலைவு வரை 10வழிச் சாலைகளாக தரம் உயர்த்திட ஒன்றிய அரசு முன்வருமா? என்ற கேள்வியை நாடாளுமன்ற மக்களவையில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு எழுப்பி இருந்தார்.

இதற்கு 20.03.2025 அன்று பதிலளித்த ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்கள், இத்தகைய கோரிக்கைகள் அரசுக்கு வந்தவண்ணம் உள்ளன. அவற்றின் மீதான முடிவு குறிப்பிட்ட சாலையில் போக்குவரத்து அடர்த்தி, நெடுஞ்சாலை இணைப்புக்கான அவசியம், முன்னுரிமை தேவை, பிரதமர் கதிசக்தி திட்டத்துடனான இயைபு போன்ற பல்வேறு அம்சங்களின் அடிப்படையில் எடுக்கப்படுகின்றன. வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சென்னை நெடுஞ்சாலைகள் மேம்பாட்டுத் திட்ட முன்மொழிவுகள் தொடர்பாக தற்போது ஒன்றிய அரசின் பரிசீலனையில் எதுவும் இல்லை என்று தெரிவித்தார்.

திருப்பெரும்புதூர் சுங்குவார்சத்திரம் வாலாஜா பாத் தேசிய நெடுஞ்சாலை திட்டம்:

நீண்ட தாமதத்துக்குப் பிறகும் நிறைவடையாத திருப்பெரும்புதூர் சுங்குவார்ச்சத்திரம் வாலாஜா பாத் சாலைப் பணிகள் எப்போது முடிவடையும் என்ற மற்றுமொரு கேள்வியையும் டி.ஆர்.பாலு, எம்.பி. நாடாளுமன்றத்தில் கேட்டிருந்தார். இந்தக் கேள்விக்கும் ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி நேற்று (20.3.2025) அன்று பதிலளித்தார்.

சென்னை பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையின் பூந்தமல்லி வாலாஜாபாத் சாலைப் பகுதியை ஆறுவழிப் பகுதியாக தரம் உயர்த்திட மேற்கொள்ளப்பட்ட திட்டப் பணிகள் ஜூன், 2012இல் தொடங்கப்பட்டன. சுங்கச் சாலையாக அமைத்து இயக்கிட இந்த திட்டம் எஸ்ஸெல் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது.

ஆனால் உரிமதாரரான எஸ்ஸெல் நிறுவனம் திட்டப் பணிகளை உரிய முறையில் நிறைவேற்றத் தவறிய காரணத்தால் உரிம ஒப்பந்தம் ஜூலை 2016 ஆம் ஆண்டில் ரத்து செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, இந்தத் திட்டம் திருப் பெரும்புதூர் காரைப்பட்டி, காரைப்பட்டி வாலாஜா பாத் என திருப்பெரும்புதூர் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் திருப்பெரும்புதூர் காரைப்பட்டி சாலைப் பணிகள் 2025 ஏப்ரல் இறுதியிலும், அடுத்த பகுதியான காரைப்பட்டிவாலாஜாபாத் சாலைப் பணிகள் 2026 அக்டோபர் மாதத்திலும் நிறைவடையும் என அமைச்சர் திரு. நிதின் கட்கரி மக்களவையில் டி.ஆர். பாலுவுக்கு எழுத்துப்பூர்வமாக 20.03.2025 அன்று அளித்த தனது பதிலில் தெரிவித்துள்ளார்.

---

### 2019இல் துவங்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட

# மதுரை எய்ம்ஸ் பணிகளை முடிக்க இவ்வளவு காலதாமதம் ஏன்?

## மக்களவையில் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத்தலைவர் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!



புதுடெல்லி, மார்ச்.22- மதுரை AIIMS திட்ட தாமதத்திற்கு முக்கிய காரணங்கள் என்ன?அவற்றை சரி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என மக்களவையில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத்தலைவருமான தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு :-

மதுரையில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தின் (AIIMS) திட்டத்தின் தற்போதைய நிலை மற்றும் அது முடிவடைய எதிர்பார்க்கப்படும் காலக்கெடு என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

மதுரை AIIMS திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட மொத்த பட்ஜெட் விவரங்கள் என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

திட்டத்தின் முன்னேற்றத்தைக் குறைக்கும் விதமாக எந்தவொரு நிதி வழங்குதலில் தாமதங்கள் உள்ளனவா? அவ்வாறு இருந்தால், அதன் விவரங்களை தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.

மதுரை AIIMS திட்ட தாமதத்திற்கு முக்கிய காரணங்கள் என்ன? மேலும், அவற்றை சரிசெய்ய எவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படுகிறது எனக் கேள்வி எழுப்பினார்.

குறைந்தபட்சம் மேலும் தாமதங்களை தவிர்க்க என்ன முன்னெச்சரிக்கை திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன? அவ்வாறு இருந்தால், அதன் விவரங்களை தெரியப்படுத்தவும் கேள்வி எழுப்பினார். எனக்

மதுரை AIIMS திட்டத்தின் முன்னேற்றம் குறித்து மாநில அரசுக்கும் பொது மக்களுக்கும் ஒன்றிய அரசு முறையாக தகவல் வழங்கியுள்ளதா? அவ்வாறு இருந்தால், அதன் விவரங்களை தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.

---

### சென்னையில் மெட்ரோ திட்டப் பணிகள்

# காலதாமதமின்றி நடைபெற போதிய நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும்!

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை வலியுறுத்தல்!



புதுடெல்லி, மார்ச் 22- சென்னையில் மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் காலதாமதமின்றி நடைபெற போதிய நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை வலியுறுத்தினார்.

மக்களவையில் இது தொடர்பாக அவரது கேள்விகள் வருமாறு:-

தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் மெட்ரோல் திட்டங்கள் குறித்தும் மேலும் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்தும் விவரமாக தெரிவிக்க வேண்டும்.

தேசிய அளவில் உள்ள மெட்ரோ ரயில் திட்டப் பணிகளுக்கு ஏற்ப தமிழ்நாட்டில் பணிகள் உள்ளனவா!

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் மெட்ரோ பணிகளில் குறிப்பிடத்தக்க நவீன தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு வருவது பற்றியும் தமிழ்நாட்டின் ‘மெட்ரோ’ திட்டங்களிலும் அதே மாதிரி மேற்கொள்ளப்படுகிறதா என்பது பற்றியும் தெரிவிக்கவும்.

வளர்ந்து வரும் நகர்ப்புறங்களுக்கு ஏற்ப சென்னை போன்ற பெரு நகரங்களில் மெட்ரோ ரயில் தொடர்புகளை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா அல்லது எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து தெரிவிக்கவும்.

தாமதத்தை தவிர்த்து குறிப்பிட்ட காலத்தில் தமிழ்நாட்டில் மெட்ரோல் ரயில் திட்டங்களை முடிக்க ஒதுக்கப்பட்ட நிதி குறித்து தெரிவிக்கவும்.

சென்னையில் மெட்ரோ ரயில் திட்டங்களை நவீனப் படுத்தவும், விரிவாக்கம் செய்யவும் எதிர்கால திட்டங்கள் இருப்பின் அது குறித்து விரிவாகத் தெரிவிக்கவும்

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டார்.

அதற்கு ஒன்றிய துணை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற அமைச்சர் விரிவாகப் பதிலளித்தார்.

---

### பாலாறு நதியைப் பாதுகாக்க

# தமிழ்நாடு அரசு மட்டுமே தொடர்ந்து நிதி ஒதுக்கீடு!

## மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!



புதுடெல்லி, மார்ச் 22 - தமிழ் நாட்டில் பாலாறு நதியைப் பாதுகாக்கவும் ஒன்றிய அரசு ஏதேனும் நிதியை வழங்கியுள்ளதா? அப்படியானால் அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால் அதற்கான காரணங்கள்? என்ன? என்று வேலூர் தொகுதி எம்.பி. டி.எம்.கதிர் ஆனந்த் மக்களவையில் எழுத்து மூலம் கேள்வி கேட்டிருந்தார்.

வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள அணைக்கட்டு மற்றும் கே.வி. குப்பம் பகுதிகளில் உள்ள விவசாயிகளின் நலனுக்காக வேலூரில் உள்ள எரையங்காடு கிராமத்தில் கோடாறு மற்றும் பாலாறு சங்கமிக்கும் இடத்தில் முதல் படுகை அணை கட்டுவதற்கு ஒன்றிய அரசு ஏதேனும் நிதியை வழங்கியுள்ளதா? அப்படியானால் அதன் விவரங்கள்; தருக.

இழந்த ஆற்று மணலை மீட்டெடுக்கவும் அதிகப்படியான மழைநீரை ஆற்றின் வறண்ட பகுதிகளுக்கு வெளியேற்றவும் கூடுதல் படுகை அணைகள் கட்டுவதற்கு ஆதரவளிக்க ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா? அப்படியானால் அதன் விவரங்கள் தெரிவிக்கவும் எனவும் அவர் கேள்வி கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் ஜல் சக்திக்கான ராஜாங்க அமைச்சர் ராஜ் பூஷண் சவுத்ரி எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:-

2021-2022, 2022-2023 மற்றும் 2023-2024 ஆம் ஆண்டுகளில் பாலாறு நதியைப் பாதுகாக்க தமிழ்நாடு அரசு மட்டுமே நிதி வழங்கியுள்ளது. ஒன்றிய அரசு நிதி ஏதும் ஒதுக்கீடு செய்யவில்லை என்று தெரிகிறது.

பின்வரும் பணிகளுக்காக தமிழ் நாடு மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

1. ராணிப்பேட்டை மாவட்டத்தின் ஆற்காடு மற்றும் வாலாஜா தாலுகாக்களில் உள்ள திருப்பற்கடல் வளவனூர் கிராமத்திற்கு அருகில் பாலாற்றின் குறுக்கே ஒரு நிலத்தடி அணைக்கட்டு கட்டுமானத் திட்டத்துக்கு தமிழ்நாடு மாநில அரசு ரூ.47 கோடியே 86 இலட்சத்து 42 ஆயிரம் வழங்கியுள்ளது.

2. வேலூர் மாவட்டத்தின் வேலூர் தாலுகாவில் உள்ள செண்பாக்கம் கிராமத்திற்கு அருகில் பாலாற்றின் குறுக்கே துணை மேற்பரப்பு அணைக் கட்டு கட்டுமானப்பணி நிறைவேற்ற தமிழ்நாடு மாநில அரசு ரூ.18 கோடியே 31 இலட்சம் நிதி வழங்கியுள்ளது.

3. வேலூர் மாவட்டம் காட்பாடி தாலுகாவில் உள்ள அரும்பருத்தி கிராமத்திற்கு அருகில் பாலாற்றின் குறுக்கே துணை மேற்பரப்பு அணைக் கட்டு கட்டுவதற்கு தமிழ் நாடு மாநில அரசு ரூ.24. கோடியே 82 இலட்சம் நிதி வழங்கயுள்ளது

4. வேலூர் மாவட்டம் அணைக்கட்டு தாலுகாவில் உள்ள பொய்கை கிராமத்திற்கு அருகில் பாலாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்ட தமிழ் நாடு மாநில அரசு ரூ.18 கோடியே 32 இலட்சம் நிதி வழங்கியுள்ளது.

5. வேலூர் மாவட்டம் அணைக்கட்டு தாலுகாவில் உள்ள இரையாக்காடு கிராமத்திற்கு அருகில் பாலாற்றின் குறுக்கே படுகை அணை கட்ட தமிழ் நாடு மாநில அரசு ரூ.52 கோடியே 48 இலட்சம் நிதி வழங்கயுள்ளது.

தமிழ்நாடு அரசு அணைக்கட்டில் உள்ள இரையாங்காடு கிராமம் மற்றும் வேலூர் மாவட்டத்தின் கே.வி.குப்பம் தாலுகாக்களுக்கு அருகில் பாலாற்றின் குறுக்கே படுகை அணை கட்டுவதற்கு ரூ.52 கோடியே 48 இலட்சம் நிதியை வழங்கியுள்ளது.

இந்தத் திட்டம் பாலாறு மற்றும் கோடாறு நதிகளுக்கு இடையே விகிதாசாரமாக நதி நீரைப் பிரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் திட்டம் பாலாறு மற்றும் கோடாறு நதியின் இருபுறமும் உள்ள சுற்றியுள்ள 12 கிராமங்களில் நிலத்தடி நீரை வளப்படுத்தவும் 12 ஊடுருவல் கிணறுகளை மறுசீரமைக்கவும் 626 பாசனக் கிணறுகள் மூலம் 1379.49 ஹெக்டேர் விவசாய நிலங்களுக்குப் பயனளிக்கவும் திட்டமிட்டு ள்ளது. இது 7642 விவசாயிகளுக்கு நேரடியாகவும் 75000 நபர்களுக்கு மறைமுகமாகவும் பயனளிக்கும்.

(இ) பாலாற்றின் குறுக்கே பின்வரும் தடுப்பணைகள் அணைக்கட்டு கட்ட தமிழக அரசின் நீர்வளத் துறை திட்டமிட்டுள்ளது.

1. திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி தாலுகாவில் உள்ள அம்பலூர்ராமநாயக்கன்பேட்டை கிராமங்களுக்கு இடையே பாலாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல்.

2. வேலூர் மாவட்டம் பெர்ணாம்பட்டு தாலுகாவில் உள்ள மேல்பட்டி கிராமத்திற்கு அருகில் பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல்

3. அணைகட்டு தாலுகாவில் உள்ள கிழச்சூர் மற்றும் பசுமத்தூர் கிராமங்களுக்கும் வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் தாலுகாவிற்கும் இடையில் பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல்.

4. ராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி தாலுகாவில் உள்ள சங்கரம்பாடி கிராமத்திற்கு அருகில் பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல்.

5. காஞ்சிபுரம் மாவட்டம் காஞ்சிபுரம் தாலுகாவில் உள்ள வெங்களத்தூர் கிராமத்திற்கு அருகில் பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல்.

6. காஞ்சிபுரம் மாவட்டம் காஞ்சிபுரம் தாலுகாவில் உள்ள வெங்கடபுரம் கிராமத்திற்கு அருகில் பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல்.

7.காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத் தாலுகாவில் உள்ள வெங்குடி கிராமம் அருகே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல்.

8. செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் தாலுகாவில் உதயம்பாக்கம் கிராமம் அருகே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணி.

9. செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் தாலுகாவில் உள்ள நல்லத்தூர் கிராமம் அருகே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல்.

இவ்வாறு ஒன்றிய அரசின் ஜல்சக்தி அமைச்சரிடம் மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற தொகுதி எம்பி கதிர் ஆனந்த் கேட்ட கேள்விகளுக்கு தமிழ் நாடு மாநில அரசு ஒதுக்கீடு செய்துள்ள நிதி மற்றும் பாலாற்றின் பாதுகாப்பு திடப்படுத்த தமிழ் நாடு அரசின் திட்டங்களை பட்டியலிட்டு பதில் அளித்துள்ளது ஆச்சரியம் கலந்த வியப்பூட்டுகிறது.

---

### தமிழ்நாடு மாநிலத்தில் லோக் அதாலத் மூலம்

# தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை எத்தனை?

## மக்களவையில் காஞ்சிபுரம் க.செல்வம் கேள்வி!



புதுடெல்லி, மார்ச் 22 - நாடாளுமன்றக் கூட்டத்தொடர் கேள்வி நேரத்தில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், சட்டம் மற்றும் நீதி சார்ந்த அமைச்சகத்தில் கேட்ட கேள்வி வருமாறு:-

கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாடு மாநிலத்தில் நடத்தப்பட்ட லோக் அதாலத்களின் எண்ணிக்கை மற்றும் இந்தக் காலகட்டத்தில் தீர்வு காணப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கை:

நாடு முழுவதும் உள்ள பல்வேறு மாநிலங்களில் லோக் அதாலத் மூலம் தீர்வு காணத் தகுதியான நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை;

வழக்கமான நீதிமன்றங்கள் மீதான சுமையைக் குறைப்பதில் லோக் அதாலத்கள் பயனுள்ளதாக இருந்ததா மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள்;

வழக்கு நிலுவையில் உள்ளதைக் குறைப்பதில் லோக் அதாலத்தின் செயல்திறனை அரசாங்கம் மதிப்பீடு செய்ததா மற்றும் அப்படியானால், அத்தகைய மதிப்பீட்டின் முக்கிய கண்டுபிடிப்புகள்;

லோக் அதாலத்தின் அதிகார வரம்பை விரிவுபடுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையெனில் அதற்கான காரணங்கள்; மற்றும் (எஃப்) லோக் அதாலத்தின் செயல்திறன் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் ஏதேனும் சீர்திருத்தங்களை முன்வைத்துள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன? என கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அமைச்சர் ஆர்ஜுன் ராம் மேக்வால் பதிலளிக்கையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் மாநிலம்/யூடி வாரியாக (தமிழ்நாடு உட்பட) மற்றும் தேசிய லோக் அதாலத்கள், மாநில லோக் அதாலத்கள் மற்றும் நிரந்தர லோக் அதாலத்கள் (பொதுப் பயன்பாட்டு சேவைகள்) மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட லோக் அதாலத்களின் எண்ணிக்கை, பெறப்பட்ட வழக்குகள் மற்றும் தீர்வு செய்யப்பட்ட வழக்குகளின் ஆண்டு வாரியான விவரங்கள் முறையே இணைப்புஏ, இணைப்புபி மற்றும் இணைப்புசியில் உள்ளன. (அதற்கான பட்டியல் இணைப்பு) என்று குறிப்பிட்டார்.